# மான்மின் நியூஸ்

# Manmin News

தமிழ் மாத இதழ்
Tamil Monthly

Volume : 1 Issue : 4 | November 2015 | 4 Pages Free Copy

மலர் : 1 இதழ் : 4 | நவம்பர் 2015 | 4 பக்கம் இலவச பிரதி


## “உங்கள் கண்முன்னே பரலோகத்தின் மகிழ்ச்சியையும் அழகையும் அனுபவிக்கலாம்!”

### சபை ஆண்டுவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பரலோக சந்தோஷம் உணரப்படுகிறது



ஆண்டவர் இன்றும்கூட அழகான பரலோகத்தில் அநேக வாசஸ்தலங்களை ஆயத்தம் செய்துக் கொண்டிருக்கிறார். நாம் அங்குப் பிரவேசிக்கையில், நம் விருப்பத்திற்கு ஏற்றபடி நம்முடைய பரலோக வாசஸ்தலங்களை உருவாக்கிய தேவனுடைய ஆச்சரியமான மிக நுட்பமான அன்பை உணர்ந்தவர்களாய் கண்ணீரோடு நன்றி செலுத்துவோம். நாம் தேவனுடைய உண்மையான பிள்ளையாக மாற, பரலோகத்தில் தேவனை துதிக்க, என்றென்றும் அவரோடு அன்பைப் பகிர்ந்து கொள்ள ஆண்டவரை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, கட்டளைகளை கைக்கொண்டு, தேவனைப் பிரியப்படுத்த வேண்டும்.

மான்மின் விசுவாசிகளில் பெரியவர்களோ வாலிபர்களோ அல்லது சிறு பிள்ளைகளோ யாராக இருந்தாலும் பரலோகத்தைக் குறித்து நன்கு அறிந்து வைத்துள்ளனர். அவர்கள் அது எங்கு உள்ளது, எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது, மேலும் அங்கு என்ன செய்வார்கள் என்பதையும் தெரிந்து வைத்துள்ளனர். காரணம், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் எண்ணற்ற அளவிலான உபவாசம் மற்றும் ஜெபத்தின் மூலமாக பரலோகத்தைப் பற்றிய விளக்கமான வெளிப்பாட்டினை பெற்று, அதைப் பற்றி தொடர்ச்சியான பிரசங்கத்தையும் கொடுத்திருக்கிறார். அவருடைய பிரசங்கத்தின் அடிப்படையில் *பரலோகம் I & II* என்னும் இரண்டு பாகங்களடங்கிய புத்தகம் (இதைப் பற்றிய கட்டுரை 3 ம் பக்கத்தில்) பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவரிடம் இருந்து அவைகளைப் பற்றி விசுவாசிகள் கற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் அவர்கள் கலைநிகழ்ச்சி குழுவினர் மூலமாக பரலோகத்தை உணரத்தக்க கலை நிகழ்ச்சிகளையும் பார்த்துள்ளனர். கலைக்குழுவினரின் துதி, நடனம், ஒப்பனை, ஆடை அலங்காரம் மற்றும் கலைப்பொருட்கள் என அனைத்தும் நமக்குப் பரலோகத்தை நினைப்பூட்டுகின்றன. தேவன் சபை விசுவாசிகள் பரலோகத்தை அதிகம் உணரவேண்டும் என விரும்புகிறார். ஆகவே அவர் 27வது ஆண்டுவிழா முதற்கொண்டு சபையின் ஆண்டு விழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கான தலைப்பையும், பாடலையும் கொடுத்து கொண்டு வருகிறார்.

2009ல் “பரலோகம்” மற்றும் 2010ல் “கடலிலே விருந்து” என்ற தலைப்புகளில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் இரட்சிப்பைப் பெற்று பரலோகத்திற்குள் நுழைந்த விசுவாசிகள் அழகான இராகங்கள், கருவிகள் மற்றும் நடனங்களோடு மகிழ்ச்சியையும் நன்றியையும் ஏறெடுப்பதை வெளிப்படுத்தியது.

2011ல், “மேய்ப்பரின் மாளிகை” என்ற தலைப்பின்கீழ் புதிய எருசலேமில் நடைபெறும் விருந்தானது கலை நிகழ்ச்சிகள்மூலம் காண்பிக்கப்பட்டது. பார்வையாளர்களின் கண்களுக்கு முன்னே அழகான புதிய எருசலேம் காட்சிப்படுத்தப்பட்டது. அதில் இருக்கும் பொழுதுபோக்கு பூங்காவில் நாம் இரத்தினங்களாலான இரயிலில் சவாரி செய்யலாம்; குளுமையான தென்றலை அனுபவிக்க முடியும்; உற்சாகத்தை தரும் வாகனங்களில் பயணிக்கவும் முடியும்.

2012ல், “வானமும் பூமியும்” என்ற தலைப்பின்கீழ், மான்மினை அதன் 30வது ஆண்டுவிழாவரை வழிநடத்திய தேவனுடைய அன்பை பூமியிலுள்ள நன்றாக சீர்படுத்தப்பட்ட ஜனங்களும், பரலோக சேனை தூதர்களும் துதிக்கிற கலைநிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டன.

2013ல், “மேய்ப்பரின் மாளிகை II” என்ற தலைப்பில் கலைநிகழ்ச்சி வழங்கப்பட்டது. அந்நிகழ்ச்சி பிரதான தூதர்கள் “தேவன் அன்பானவர்” என்னும் அர்த்தங்கொண்ட “அபுரேசியா மக்காரே டோஷா” என்ற பரலோக மொழியின் பாடலை துதிப்பதன் மூலம் தொடங்கியது. தேவனுடைய அன்பினால் நிரப்பப்பட்டவர்களாய் பார்வையாளர்கள் சிலிர்த்துப் போயினர்.

கலைநிகழ்ச்சியானது, பரலோகத்தில் வசந்தகாலம், கோடைக்காலம், இலையுதிர்காலம் மற்றும் குளிர்காலம் என்னும் நான்குப் பருவத்தை வெளிப்படுத்தும் காலங்களின் தோட்டம்; மலர் தோட்டம்; பனித் தோட்டம்; பொழுதுபோக்கு பூங்கா; கடலின் ஆழங்கள் மற்றும் நடைபாதைப் போன்ற பரலோகத்தின் பலதரப்பட்ட இடங்களை விவரித்தது.

2014ல், பார்வையாளர்கள் புதிய எருசலேமில் இருக்கும் தெளிவான ஏரியில் உள்ள விருந்து அறையைப் போன்று வெளிப்படுத்தப்பட்டிருந்த தலைமை ஆலயக் கட்டிடத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். “அழைப்பிதழ்” என்னும் தலைப்பில், தேவனால் மேய்ப்பருக்கும், அங்கத்தினர்களுக்கும் அழகான கிருபை நிறைந்த பரலோக வார்த்தைகளால் எழுதப்பட்டிருந்த அழைப்பு அட்டை அனுப்பப்பட்டிருந்தது.

ஆண்டுவிழாவின் துவக்க நிகழ்ச்சியில் “மேய்ப்பரின் மாளிக்கை” என்ற 3D வீடியோ காண்பிக்கப்பட்டது. அதைப் பார்த்தவர்கள் தேவனுடைய அன்பை உலகமெங்கிலும் இருக்கிற சகல ஜனங்களுக்கும் அறிவிக்கும்படியான வாஞ்சையினால் முழுமையாக நிரப்பப்பட்டனர்.

அக்டோபர் 9ம் தேதி வெள்ளிக்கிழமை முழு–இரவு ஆராதனையில் 33வது ஆண்டுவிழாவின் துவக்க நிகழ்ச்சி “பூக்களின் திருவிழா” என்ற தலைப்பிலும், அக்டோபர் 11ம் தேதி ஞாயிற்றுக்கிழமை “மகிமை” என்ற தலைப்பில் ஆண்டுவிழா நிகழ்ச்சியும் நடைபெற்றது. சுமார் முந்நூறுக்கும் அதிகமான கலை நிகழ்ச்சி குழுவினர்கள் இதற்காக மிகவும் ஊக்கமாக ஆயத்தப்பட்டனர். அநேக விருந்தினர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து பங்குபெற்றனர்.

# தேவனுடைய இருதயம்



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

**“ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் (மத்தேயு 6:31-32).**

தேவன் தமது அன்பு பிள்ளைகள் எந்தவொரு கவலைகள் அல்லது பாரங்கள் இல்லாமல் சமாதானத்தில் வாழவேண்டுமென ஊக்கமாக விரும்புகிறார். அவர் நம்முடைய தேவைகளை அறிந்திருப்பது மாத்திரமல்ல ஆனால் அவைகளை நிறைவாக்கவும் செய்கிறார். இப்போது நாம் அவருடைய இதயத்தைப் புரிந்துக் கொண்டு சமாதானத்தில் வாழ என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

### 1. வறுமை, வியாதி மற்றும் பேரழிவுகளிலிருந்து நாம் தூரப்பட்டிருக்க வேண்டும் என்று தேவனுடைய இருதயம் விரும்புகிறது.

ஒருவருடைய வாழ்வில் கவலைகள் அல்லது பாரங்கள் இல்லாமல் இருப்பது என்பது எளிமையான காரியமல்ல. இதன் காரணம், ஆதாமின் வீழ்ச்சி முதற்கொண்டு, நிலம் சபிக்கப்பட்டது. பின் வாழ்க்கை தானே பாடுகள் நிறைந்த வாழ்வாயிற்று (ஆதியாகமம் 3:17–18).

மேலும், நிலம் சபிக்கப்பட்ட காரணத்தால், தீமை விளைவிக்கக்கூடிய கிருமிகளும், வைரஸ்கள் பலவும் தோன்ற ஆரம்பித்தன. மக்கள் வியாதிகளின் பயத்தில் வாழ வேண்டி இருக்கிறது. இதற்கும் மேல், மக்கள் இயற்கை பேரழிவுகள் அல்லது விபத்துகளின் தொடர் தேர்ச்சியான பயத்தில் வாழ நேர்ந்தது.

வறுமை, வியாதி மற்றும் பேரழிவுகள்தான் கவலைகள் மற்றும் பாரங்களுக்கான மூன்று முக்கிய காரணிகள். நீங்கள் எவ்வளவு விழிப்புள்ளவர்களாய் இருந்தாலும்கூட அவைகள் விரும்புவாரில்லாமலும் அழையாவிருந்தாளிகளாகவும் வந்து சேர்கின்றன. பல மக்கள் கிருமிகள் அல்லது வைரஸ்களால் ஏற்படும் வியாதிகளிலிருந்து மாத்திரம் அல்ல “பெலவீனங்களினாலும்” கஷ்டப் படுகின்றனர்.

வேதாகம ரீதியில் “பெலவீனங்கள்” என்பது சரீரத்தின் ஒன்று அல்லது அதற்கு மேலான பகுதிகள் முடங்கி அல்லது சீர்குலைந்துபோவதால் இயல்பாகச் செய்யக்கூடிய வேலைகளைச் செய்ய முடியாமல் போகும் நிலையைக் குறிக்கிறது. மத்தேயு 8:17 வியாதிகள் மற்றும் இப்பேற்பட்ட பெலவீனங்களை வித்தியாசப்படுத்தி கூறுகிறது, “அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.”

வியாதிகள் தானே வேதனை நிறைந்தது. ஆனால் குடும்ப அங்கத்தினர்களும் மனோ வேதனைகளில் கஷ்டப்படுவர். மேலும் அது குறிப்பிட்ட அளவு பொருளாதார தடைகளை கொண்டு வரும். நீங்கள் நோய்வாய்ப்பட்டால் உங்களால் வேலைச் செய்ய முடியாது. மேலும் அது உங்களைப் பெருத்த அளவு மருத்துவச் செலவுகளைச் செய்ய வைக்கும். பெரும் விலையில் உங்கள் வியாதி குணமாக்கப்படுமானால் அது அதிர்ஷ்டம் என்பது உண்மைத்தான். உங்களுக்கு குணமாக்க முடியாத அல்லது மரணத்திற்கேதுவான வியாதி வந்து விட்டால், நீங்கள் உங்களது எஞ்சிய வாழ்வு முழுவதும் நோயாளியாக வாழ வேண்டும் அல்லது நீங்கள் சீக்கிரம் சாக வேண்டும்.

முன் அறிவிப்பு ஏதும் இல்லாமல் நமக்கு வரும் பேரழிவுகளும் இருக்கின்றன. உதாரணமாக, புயல், பூமி அதிர்ச்சி, சுனாமி போன்ற இயற்கை சீற்றங்கள் அல்லது பிற ஓட்டுனர்களால் ஏற்படும் சாலை விபத்துகளை தவிர்ப்பது மிக சிரமம். சமீபத்தில் விமான விபத்துகள், கப்பல் மூழ்குதல் அல்லது பேருந்து அல்லது உபவழி பாதைகளில் ஏற்பட்ட விபத்துகள் பல நாச விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

விளக்கப்பட்டபடி, வறுமை, வியாதி, மற்றும் பேரழிவுகள் தான் மக்களின் கவலைகளுக்கு மிக முக்கிய காரணங்களாக இருக்கின்றன. ஆனால் தேவனிலும் ஆண்டவரிலும் விசுவாசம் கொண்டிருக்கிற நீங்கள் உலகப் பிரகாரமான மக்களைவிட வித்தியாசமானவர்கள். நீங்கள் கவலைகள் அல்லது பாரங்கள் இல்லாத ஒரு வாழ்வை வாழ முடியும்.

### 2. விசுவாசத்துடன் கவலைகளும் வேதனைகளும் இல்லாத வாழ்வு வாழ திறவுகோல்களாவன:

#### 1) தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நீங்கள் மிக அடிப்படையான கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் ஆசரி மற்றும் முழு தசமபாகம் கொடு என்ற இரண்டு கற்பனைகளுக்குக் கீழ்ப் படிந்தாலே, அது உங்களை முக்கால்வாசி வறுமை, வியாதிகள் மற்றும் பேரழிவுகளிலிருந்து விடுதலை யாக்கிவிடும்.

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளில் ஒருவர் என்று நிரூபிக்கக்கூடிய குறைந்தபட்ச ஆதாரம் எதுவென்றால் நீங்கள் கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதும், முழு தசமபாகம் செலுத்துவதுமேயாகும். நீங்கள் குறைந்தபட்ச விசுவாசத்தைக் காண்பித்தால், நீங்கள் வறுமை, வியாதிகள், பேரழிவுகளைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. தேவனுடைய அன்பு எத்தனைப் பெரியது பாருங்கள்!

உங்களில் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்தவர்கள் வறுமை சில வருடங்களிலே போய்விட்டதை அனுபவித்திருப்பீர்கள். உதாரணமாக கஷ்டமான காரியங்கள் தானே விலகிச் சென்றிருக்கும். மேலும் நீங்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து ஆர்டர் களை அதிகமாக பெறுவீர்கள். கூடவே, எதுவும் திருடு போகாததால் மோசடி செய்யப்படாததால், உங்களுக்கு வியாதிகள் வராததால் நீங்கள் பேரழிவுகளை சந்திக்காததால், உங்கள் பணத்தை நீங்கள் வீணாக்க வேண்டியதில்லை.

நான் புதிய விசுவாசியாக இருந்ததிலிருந்து நான் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து அவைகளைப் பயிற்சி செய்தேன். எனக்கு மிகப் பெரும் கடன் இருந்தபோதிலும்கூட, வட்டியை மட்டுமே கட்ட கஷ்டப்பட்ட போதும், நான் எப்போதும் போதுமானதிற்கும் அதிகமாக தசமபாகத்தை செலுத்தினேன். அதன்விளைவாக, நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டேன். அதனால் உலகில் உள்ள போதகர்கள் அனைவர் மத்தியிலும் நான் மிகப் பெரும் தொகையை தசமபாகமாகச் செலுத்தி, தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்கிறேன் என தைரியமாக என்னால் சொல்ல முடியும் (மல்கியா 3:10).

நான் ஆண்டவரை சந்தித்து, அவருடைய வார்த்தையின்படி வாழ துவங்கியதிலிருந்து, நான் மருத்துவமனைக்குச் சென்றதில்லை, எந்த ஒரு மருந்துகளையும் எடுத்துக் கொண்டதில்லை. நான் எந்த ஒரு பேரழிவுகளையும் சந்தித்ததும் இல்லை. இதே தான் என் குடும்பத்தினருக்கும் நடந்தது.

நீங்கள் கர்த்தருடைய நாளைப் பரிசுத்தமாய் ஆசரித்து, முழு தசமபாகங்களைச் செலுத்தினால், பின் தேவன் உங்களிலிருந்து வறுமையை விரட்டி வியாதிகள் மற்றும் பேரழிவுகளிலிருந்தும் உங்களைப் பாதுகாப்பார். ஆனால் சில சமயங்களில் சில மக்கள் இந்த இரண்டு கற்பனைகளையும் கைக்கொண்டாலும்கூட வியாதிப்படுகின்றனர் அல்லது பேரழிவுகளை சந்திக்கின்றனர். அப்படியானால், அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். அவருடைய வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படிந்தும் தேவன் உங்களை ஆசீர்வதியாமலும் அல்லது பாதுகாக்காமலும் இருக்க வழியே இல்லை.

அவர் அப்படிச் செய்யவில்லையானால், இதற்குக் காரணம் நீங்கள் தேவனுடைய சித்தத்திற்கு எதிரான வழியிலே சென்று கொண்டிருப்பதேயாகும். உதாரணமாக புற்றுநோய் போன்ற பயங்கரமான நோய் இருக்கிற நிலையில், பல நிலையில் அவர்களோ அல்லது அவர்கள் குடும்பத்தினரோ பயங்கரமான மரணத்துக்கு நேராக வழிநடத்தும் பாவங்களைச் செய்திருப்பர்.

உண்மையில், இப்படிப்பட்ட நோய்கள் தேவனுடைய சிறந்த அநாதி திட்டத்தில் அனுமதிக்கப் படுகிற பிறநிலைகள் உள்ளன. இதைக் குறித்த அதிக விளக்கங்கள் பரிகாரியான தேவன் என்ற புத்தகத்திலும், செய்திகளிலும் விளக்கப்பட்டு உள்ளது.

சில நேரங்களில் மக்கள் தங்கள் தொழில்களில் பணநஷ்டம் அல்லது வேலையை விட்டுத் தூக்கி எறியப்படுதல் போன்ற கஷ்டங்களை சந்திப்பர். இதற்கு ஆவிக்குரிய காரணங்களைத் தேடினால், பல நிலைவரங்களில் அவர்கள் இரட்சிப்பை இழக்கச் செய்கிற மாம்சத்தின் வெளியரங்கமான கிரியைகளைச் செய்திருப்பர் (கலாத்தியர் 5:19–21). இப்படிப்பட்ட நிலையில், நீங்கள் கர்த்தருடைய நாளை ஆசரித்தும் அல்லது தசமபாகங்கள் செலுத்தியும் இருந்தாலும்கூட, தேவனால் உங்களை பாதுகாக்க முடியாது. ஆதலால், அவர்கள் முற்றிலுமாக பாவ அறிக்கைச் செய்து மனந்திரும்பி, அந்தப் பாவங்களை முற்றிலுமாக விட்டுத் திரும்ப வேண்டும்.

ஆக, நீங்கள் முற்றிலுமாக பாவ அறிக்கைச் செய்து முற்றிலுமாக மனந்திரும்ப வேண்டும். தேவன் அன்பாய் இருக்கிற காரணத்தால், அவர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதித்து, அவர்களை எப்போதும் பாதுகாக்க விரும்புகிறார்.

#### 2) முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுதல்.

சில மக்கள் கர்த்தருடைய நாளை ஆசரித்தும், முழு தசமபாகம் கொடுத்தும் பயங்கரமான பாவங்கள் செய்யாதிருந்தும் கூட, இன்னமும் அவர்கள் கவலைகளிலும் பாரங்களிலும் வாழ்ந்துக் கொண்டிருப்பார்கள். இதன் காரணம் அவர்களது விசுவாச வளர்ச்சி தேக்க நிலைவரத்தில் இருப்பது தான். அதாவது அவர்களது விசுவாசம் தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிற நிலையான விசுவாச அளவாக முதிர்ச்சியடையவில்லை.

சிறு பிள்ளைகள் இளம் வாலிபர்களாக வளர்ந்தும் அவர்கள் இன்னமும் பெற்றோர்களிடம் கேட்க மட்டுமே செய்து தங்கள் பெற்றோர்களுக்கு எந்த ஒரு பிரதிபலனும் செய்யாமல் இருப்பார்களானால் இதன் அர்த்தம் அவர்கள் இன்னமும் சிறுபிள்ளைகள் தான். இதே போலவே, நீங்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவு விசுவாசிகளாய் இருந்த பின்னும் இன்னமும் நீங்கள் சரீரப்பிரகாரமான காரியங் களையே தேடுவீர்களேயானால் அது வெட்கம்.

இப்பேற்பட்ட ஜனங்களிடம் தான் இயேசு, “ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்” என்று கூறி, அதன்பின்னர் அவர், “முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” என்று கூறுகிறார். நாம் அப்படிச் செய்தால், நாம் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராதபடி இவைகளெல்லாம் தேவன்கூட கொடுப்பார் என்று அவர் வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத்தேயு 6:31–33).

நான் புதிய விசுவாசியாக இருந்ததிலிருந்து இந்த வாக்கை நான் விசுவாசித்தேன். அதனால் தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக நான் என்னை தானே அர்ப்பணித்து, தேவையுள்ள விசுவாசிகளுக்கு உதவ என்னுடைய எல்லா முயற்சியையும் மேற்கொண்டேன். இப்பேற்பட்ட விசுவாசத்தின் விளைவாக, நான் காணிக்கைச் செலுத்துவதில் இன்னமும் முதலிடம் வகிக்கிறேன். ஆனால் சீக்கிரம் யாராவது என்னைவிட அதிகம் கொடுப்பார்களா என ஊக்கமாக எதிர்பார்க்கிறேன்.

மேலும், எனது குடும்ப அங்கத்தினர்கள் அல்லது சரீரப்பிரகாரமான தேவைகளை குறித்து நான் கவலைப்பட்டும், ஜெபித்தும் நீண்ட காலம் ஆகி விட்டது. நான் தேவனுடைய ராஜ்ஜியத்திற்காகவும் ஆத்துமாக்களுக்காகவும் எனது மனம், சிந்தை, ஆத்துமா, பணம் மற்றும் நேரத்தை முதலாவது செலுத்தியபோது, அவர் என் அனைத்துத் தேவைகளையும் சந்தித்தார். என் குடும்ப அங்கத்தினர்களுக்கும் சந்தித்தார். அவர் அவர்களைப் பாதுகாத்து, என் பிள்ளைகளை வளர்த்தெடுத்தார். அவர் பண ரீதியான ஆசீர்வாதங்களை தந்தது மட்டுமல்ல என்னை வியாதிகளிலிருந்தும் பேரழிவுகளிலிருந்தும் பாதுகாத்தார்.

நீங்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் ஆவிக்குரிய விசுவாசத்தோடு தேடினால், தேவன் எல்லாவற்றிலும் நிரம்பி வழிகிற அபரிதமான ஆசீர்வாதங்களை உங்களுக்குத் தருவார்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் வார்த்தையை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து அதை பயிற்சித்தால், குறைந்த பட்சம் நீங்கள் வறுமை, வியாதிகள் மற்றும் பேரழிவுகள் ஆகியவைகளைக் குறித்து கவலையோ பாரங்களோ இல்லாத சமாதான வாழ்வையாவது வாழ முடியும் (யாத்திராகமம் 15:26).

உலகப்பிரகாரமான கவலைகளை, பாரங்களை ஆண்டவருக்கு முன் வைத்துவிட்டு தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதற்கு கடின முயற்சி எடுக்கும்படியாக நான் உங்களை ஊக்குவிக்கிறேன். இப்படிச் செய்வதால், நீங்கள் பலவந்தமாய் புது எருசலேமைப் பற்றிக்கொண்டு மாபெரும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அடைவீர்கள் என்று ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# “பரலோகமும் நரகமும் நிஜமாகவே இருக்கின்றன!”

**ஏறக்குறைய அனைவருக்கும் நிஜமாகவே பரலோகமும் நரகமும் இருக்கின்றனவா என்ற கேள்வி இருப்பதுண்டு. இந்தக் கேள்விக்கான தெளிவான பதில்கள் அறிவர். ஜேராக் லீ அவர்கள் எழுதிய பரலோகம் I & II மற்றும் நரகம் என்ற புத்தகங்களில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அந்த பொருளடக்கங்கள் எண்ணற்ற உபவாசங்கள் மற்றும் ஜெபங்களின் மூலமாக தேவனால் அருளப்பட்டவை. அந்தப் புத்தகங்கள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டு திரளான ஜனங்களால் விரும்பப்படுகின்றன.**



## பரலோகம்

திரித்துவ தேவனுடைய சிங்காசனம் அமைந்துள்ள இடமாகும். அது பளிங்கைப் போன்ற தெளிவும் அழகுமுள்ளது; அது தேவனுடைய மகிமை நிறைந்தது. அது உண்மையில் கண்களை கவரக்கூடிய இடம். பரலோகத்தின் மகத்துவத்துக்கு இந்தப் பூமியில் இருக்கும் செழிப்பு, கனம் அல்லது மகிமை போன்ற எதுவும் ஒப்பிடத்தக்கதல்ல. அவ்விடத்தில் தேவனுடன் சதாகாலமும் நாம் அன்பைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

பரலோகத்தில் வித்தியாசமான வாசஸ்தலங்கள் இருக்கின்றன. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அற்பமான இரட்சிப்பைப் பெற்றவர்கள் வசிக்கும் இடம் பரதீசு; வேதாகமத்தில் இருக்கும் தேவனுடைய வார்த்தையினால் வாழ முயற்சித்தவர்களுக்கான இடம் முதலாவது சாம்ராஜ்யம்; தேவனுடைய வார்த்தையினால் வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்தியவர்களுக்கான இடம் இரண்டாம் சாம்ராஜ்யம்; பரிசுத்தமாக மாறியவர்களுக்குரிய இடம் மூன்றாம் சாம்ராஜ்யம்; பரிசுத்தத்தை அடைந்து, சகல காரியங்களிலும் உண்மையாக இருந்தவர்களுக்கான இடம் புதிய எருசலேம். மகா பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, ஒவ்வொருவருடைய விசுவாச அளவின்படி மேற்குறிப்பிட்ட இடங்களில் ஒன்றில் வாழும்படியான இடம் அவரவர்களுக்கு கொடுக்கப்படும். பிதாவாகிய தேவன், பரலோகத்திலேயே மிகவும் மகிமையான வாசஸ்தலமாகிய புதிய எருசலேமிற்குள் அவருடைய பிரியமான பிள்ளைகள் வந்து, அவரோடுகூட சதாகாலமும் அன்பை பரிமாற வேண்டும் என்று விரும்புகிறார்.






## நரகம்

புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும் இடம் (மாற்கு 9:48). அங்கு மிகுந்த அச்சமும் வேதனையும் மட்டுமே இருக்கும். நரகத்தின் கொடூரத்தன்மையை அறிந்துள்ள அன்பின் தேவன் ஏன் இப்படிப்பட்ட பயங்கரமான இடம் இருக்கும்படிச் செய்தார்?

பரலோகத்தின் எஜமானரான தேவன் பழுதற்றவரும் பரிசுத்தருமாய் இருக்கிறார். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்கள் மட்டுமே பரலோகத்திற்குள் நுழைய முடியும் (மத்தேயு 7:21). ஒருவேளை நற்குணமும் அன்பும் நிறைந்த பரலோகத்தில் தீமையான ஜனங்கள் வாழ்ந்தால், அழகான பரலோகமானது அசுத்தமாகிவிடும். பரலோகம் கோதுமை மணியைப் போன்ற விசுவாசிகள் மட்டுமே சதாகாலமும் வாழ்கிற இடம். ஆகவேதான் பரலோகத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமான “நரகம்” என்று அழைக்கப்படும் ஒரு இடத்தை உருவாக்குவதை தவிர தேவனுக்கு வேறு வழியில்லை.

லூக்கா 16ல், ஒரு ஐசுவரியவான் நரகத்தை நம்பாமல் இருந்தான். எனவே அவன் அக்கினி ஜுவாலை நிறைந்த நரகத்திலே சென்றடைந்து வருந்தினான். தேவன் எந்த ஒரு ஆத்துமாவும் நரகத்திற்குள் விழ விரும்பவில்லை. ஆதலால், நாம் பின்பு வருந்திப் பிரயோஜனமில்லை; நாம் நிச்சயம் பரலோகத்திற்குச் செல்ல வேண்டும்.



# “என் கவலையெல்லாம் மறைந்துபோனது, மகிழ்ச்சி மட்டுமே நிரம்பிவழிகிறது!”

நம்முடைய வாழ்க்கைப் பயணத்திலே நாம் சிலசமயங்களில் கஷ்டங்களை சந்திக்கிறோம். ஆனால் அந்த நிலையில் நம்முடைய வாழ்க்கையை தேவனிடத்தில் நாம் ஒப்புவித்தால், நாம் எந்தச் சூழ்நிலையானாலும் மேற்கொள்ள முடியும். கூடுதலாக, அந்த கஷ்டங்களை மேற்கொள்வதின்மூலம் நாம் விசுவாசத்தில் வளரலாம்; தேவனுடைய அன்பை உணரலாம். அநேக மான்மின் விசுவாசிகள் இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்கள் பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதின்மூலம் தாங்கள் சந்தித்த தேவனுடைய அன்பை அறிவிக்கின்றனர்.

## “என்னுடைய செவிடான காதுகள் திறந்ததால் என்னால் கேட்க முடிகிறது!”

**சகோதரி சுமாபொன் காவ்மொன், வயது 46, சியாங்ராய் மான்மின் சபை, தாய்லாந்து**

நான் செவிட்டுத்தன்மையோடு பிறந்ததினால், என் பிறப்பு முதற்கொண்டு நான் எதையும் கேட்டதில்லை. இயல்பாக இருக்கும் ஜனங்களோடு தொடர்பு கொள்வது எனக்கு கஷ்டமான தருணமாக இருந்து வந்தது. நான் கெட்டவிதமாய் உணர்ந்தேன். என்னால் கேட்க முடிந்தால், பேச முடிந்தால் அது எவ்வளவு நன்றாக இருக்குமென்று நான் நினைத்திருக்கிறேன்.

இதற்கிடையில், மே மாதம் 2015ல், மான்மின் உலக கிளை சபைகளின் வழிநடத்துகிற ஆசிரியர் உயர்திரு. ஹீசன் லீ, சீயோலிலுள்ள மான்மின் மத்திய சபையிலிருந்து சியாங்ராய் மான்மின் சபைக்கு ஒரு கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தை (அப்.19:11–12) நடத்த வருகிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். நான் வாஞ்சையுள்ள இருதயத்தோடு இந்த கூட்டத்திற்காக காத்திருந்தேன். நான் நிஜமாகவே கேட்க விரும்பினேன்.



நான் வேலைகளை முடித்தப் பிறகு சோர்வையும், களைப்பையும் உணர்ந்தபொழுதும் ஒவ்வொரு இரவும் தானியேல் ஜெபத்தில் வந்து பங்குப் பெற்று, என்னுடைய இருதய விருப்பத்திற்காக தேவனுடைய பதிலைக் கேட்டேன். முடிவிலே கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டம் நடந்தது. உயர்திரு. லீ, தலைமை போதகர் ஜெபித்து கொடுத்த வல்லமை அடங்கியுள்ள கைக்குட்டையை வைத்து நோயாளிகளுக்காக ஜெபித்தார்கள்.

நான் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன், என் வலது காது சிறிது சிறிதாக கேட்கத் தொடங்கியது. அதன் பின் நான் என்னுடைய இடது காது வழியாக சில சப்தங்களை கேட்கத் துவங்கினேன். அது ஒரு அற்புதமே! இப்பொழுது நான் மற்றவர்கள் சொல்வதைப் புரிந்துகொள்கிறேன்; அவர்களோடு நன்றாக உரையாடவும் முடிகிறது.

நான் இதை கற்பனைக்கூட செய்துப் பார்க்கவில்லை. என்னால் எளிமையான வார்த்தைகளைப் பேச முடிகிறது. நான் முதுகு வலியிலிருந்தும், கடந்த பத்து வருடங்களாக எனக்கு தொந்தரவை கொடுத்து வந்த வயிற்றுக் கோளாரு பிரச்சனையிலிருந்தும் சுகமடைந்தேன். ஒன்றுமில்லாமையிலிருந்து காரியங்களை சிருஷ்டிக்கிற சிருஷ்டிகராகிய தேவனின் வல்லமையை நான் துதிக்கிறேன்! அல்லேலூயா!

## “என்னுடைய தொழிலில் ஆசீர்வாதம் நிரம்பிவழிகிறது!”

**கண்காணி ஜங்கியு லீ, வயது 38, தேஜ˳ மான்மின் சபை, தென் கொரியா**

எனக்கும் என் மனைவிக்கும் குழந்தை இல்லை. ஆனால் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்திற்குப் பிறகு தேவனால் நாங்கள் ஹாயுல், ஹராங் என்னும் எங்கள் பிள்ளை–களைப் பெற்றெடுத்தோம். அவர் என்னுடைய தொழிலில் நிரம்பி வழியும் ஆசீர்வாதங்களை கொடுத்துள்ளார்.



மே 2011ல், நான் கூமி என்ற பட்டணத்தில் உள்ள உணவு நடைப்பாதை என்னும் இடத்தில் திறந்தவெளி உணவகத்தை திறந்தேன். நான் முதலில் 200 முதல் 300 டாலர்கள் வரை தசமபாகத்தை கொடுத்தேன். ஆனால் மே மாதம் 2013ம் ஆண்டிலே நான் ஆசீர்வாத ஜெபத்தைப் பெற்ற பிறகு ஒவ்வொரு மாதமும் என் தசமபாகம் அதிகரித்தது. இப்பொழுது நான் 3000 டாலர்கள் தசமபாகத்தை கொடுக்கிறேன்.

நான் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு மிகவும் நன்றியோடு இருப்பதால், GCN தொலைக்காட்சி ஊழியத்திற்கு காணிக்கை கொடுக்கிறேன். ஆத்துமாக்கள் இரட்சிப்பைப் பெறவேண்டி நான் ஏழைகளுக்கு உதவி செய்கிறேன். நான் தேவனுக்கு காணிக்கைகளை கொடுப்பதிலே உற்சாகமடைகிறேன். நான் என்னுடைய வாடிக்கையாளர்களை கருத்தில் கொண்டு, அவர்களுடைய சூழ்நிலையில் என்னை வைப்பதால், என்னுடைய தொழிலை விரிவுப்படுத்தும்படியான ஆசீர்வாதத்தையும் நான் பெற்றுள்ளேன்.

பிப்ரவரி 2014ல், நான் யுக்பூங் எனப்படும் நல்ல தரமான முதிர்ந்த இறைச்சி உணவகத்தை கூமி பட்டணத்தில் இன்–டோங் என்னுமிடத்தில் திறந்தேன். மேலும் நான் எவ்வித உபபொருட்களும் சேர்க்காத முதிர்ந்த உலர்ந்த பன்றி இறைச்சி உணவகத்தை கிளைகளோடு முதன்முதலாக கொரியாவில் துவங்கினேன். உணவு சுவையை சரியாக சொல்லும் நிபுணர்களின் பாராட்டு வார்த்தைகள் மற்றும் அநேக பிரபலங்களின் வருகையின்மூலம் என்னுடைய உணவகம் பிரபலமானது.

2014 ஜூலை மாதத்தின் ஆரம்பத்தில் நான் உரிமையை பெற்றுக்கொண்டேன். இத்தொழில் இப்போது ஒரு நம்பிக்கைக்குரிய தொழிலாக அங்கீகாரம் பெற்றுள்ளது. அது தற்போது 32 கிளை உணவகங்களோடு நாடுமுழுவதும் பரவியுள்ளது. எனது மனைவி சிறுகுழு தலைவியாகவும், மாணவர் ஞாயிறு பள்ளியின் பொருளாதார இயக்குனராகவும் பணியாற்றுகிறாள். நான் ஆண்கள் குழுவின் தலைவராகவும், மாணவர் ஞாயிறு பள்ளியை வழிநடத்தும் ஆசிரியராகவும் பணியாற்றுகிறேன். நாங்கள் ஆண்டவருக்காக வேலை செய்து, நம்பிக்கையோடு பரலோகத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம்.

ஆவியிலும் சரீரத்திலும் பெரிதான ஆசீர்வாதங்களை கொடுத்து வருகிற தேவனுக்கே நான் சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

## “குணமாகாத நோய்களிலிருந்து தேவன் என்னை சுகமாக்கினார்!”

**மருத்துவர். டேனியேல் ஃப்பரே, வயது 56, கின்ஷாசா மான்மின் சபை, DR காங்கோ**

நான் ஒன்றரை ஆண்டுகளாக நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் காசநோயினால் பாதிக்கப்பட்டிருந்தேன். நான் அதிகம் இறும்பினேன், சாப்பிடுவதும் எனக்குக் கடினமாக இருந்தது. நான் அடிக்கடி நடுங்கிக் கொண்டிருந்ததால் சற்று உட்காருவதும் எனக்கு கஷ்டமாக இருந்தது. நான் மற்றவர்களின் உதவியோடு நடந்தாலும், அவ்வப்போது விழுந்துவிட்டு மருத்துவமனைக்குச் செல்வதும் உண்டு. நானே ஒரு மருத்துவராய் இருந்தும்கூட, மருத்துவ முறையினால் என்னுடைய நோய்களை குணப்படுத்த என்னால் இயலவில்லை.

என் சகோதரியின் மகள் மெர்லி என்பவள் எனக்காக மிகவும் வருந்தினாள். அவள் எனக்கு ஜீவனுள்ள தேவனை அறிவித்து சிலுவையின் செய்தி, விசுவாசத்தின் அளவு என்னும் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய இரண்டு புத்தகங்களை எனக்குக் கொடுத்தாள். நான் அவைகளை வாசித்து, கிருபையை



பெற்றுக் கொண்டேன். செப்டம்பர் 2014ல், நான் கின்ஷாசா மான்மின் சபையில் பதிவுசெய்தேன்.

நான் அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களை கேட்டு, சுகமடைவேன் என்று நம்பினேன். நான் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகள், வெள்ளிக்கிழமை முழுஇரவு ஆராதனை மற்றும் தானியேல் ஜெபத்திலும் கலந்துக் கொண்டேன்; நான் சுகமாகும்படிக்கு ஊக்கமாக ஜெபித்தேன்.

நான் எப்பொழுதும் விசுவாசத்தை அறிக்கை செய்து, தேவனுடைய வல்லமையை சார்ந்து கொண்டேன். தசமபாகத்தையும் கொடுக்கத் துவங்கினேன். நான் என்னுடைய முந்தைய பாவங்களிலிருந்து மனந்திரும்பினேன். 2015 மான்மின் கோடை சுற்றுலா முகாமில் சுகமடைய விரும்பி, உபவாசத்தோடும், வாஞ்சையின் இருதயத்தோடும் என்னை ஆயத்தப்படுத்தினேன்.

ஆகஸ்டு 2015ல், 2015 மான்மின் கோடை சுற்றுலா முகாமின் பதிவு செய்யப்பட்ட வீடியோவை பார்த்துக் கொண்டிருந்தபோது, நான் காலத்திற்கும் நேரத்திற்கும் அப்பாற்பட்ட அறிவர். லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக் கொண்டேன். ஜெபத்தைப் பெற்ற பிறகு, என்னுடைய நிலைமை முற்றிலும் வித்தியாசமானது. என்னால் நடக்கவும், சாப்பிடவும் முடிந்தது; எனக்கு இறுமலும் இல்லை; என்னுடைய எல்லா அறிகுறிகளும் தேறினது.

உண்மையான விசுவாசத்தை உணரும்படிக்கு என்னை ஆசீர்வதித்து, விசுவாசத்தின் கிரியைகளை விதைக்க எனக்கு உதவி செய்து, என்னுடைய ஜெபத்திற்குப் பதிலையும் தந்த தேவனுக்கே நான் சகல நன்றிகளையும், மகிமையையும் செலுத்துகிறேன்.

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN
World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com

Owned & Published by M. CHITTIBABU, Published from No. 470, 14th Street, T.P. Chatiram, Chennai - 600 030 and Printed by A. Dhanasekaran at “THE SAFIRE OFFSET PRINTERS,” No.3/49, Vembakottai Road, Ayyanar Colony, Sithurajapuram, Sivakasi - 626 123. Editor: M. CHITTIBABU